# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,845 — 1959 සැප්තැම්බර් 2 වැනි බදාදා — 2.9.1959

11,845 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை 4/59. பங்கீட்டரிசி (மொத்தமாகவும் சில்லறையாகவும்).

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினுலும் 3(2) ம் பிரிவினுலும் (உணவு), விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு புத்தளம் பரிபாலன டிஸ்திறிக்கு (உணவு), உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி யோன் வின்சன்ட் ஞானப்பிரகாசம் ஆகிய நான் இக்கட்டளையால் :—

(i) 1959 ம் ஆண்டு ஜுலை மாதம் 7 ந் திகதி வெளிவந்த 11,801 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலும் 1959 ம் ஆண்டு ஜுலை மாதம் 13 ந் திகதி வெளிவந்த 11,807 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்ட 2/59 ம் இலக்கமுள்ள எனது விலைக்கட்டளையை உடனடியாக எடுத்து விடுகிறேன்.

(ii) இதனுேடிருக்கும் முதலாம் அட்டவணையில் 2 ம், 3 ம் பத்திகளில் குறிக்கப்பட்டிருக்கும் விலைகளை ஒரு நிகர அந்தர் அரிசிக்கு ஆகக் கூடிய மொத்த விலையாக உடனடியாக அதே அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்வெல்லைகளுக்குள் இவ்விலைகளுக்குக் கூடுதலாக ஒருவரும் மொத்த விற்பனை செய்யக் கூடாது.

(iii) இதனுேடிருக்கும் இரண்டாம் அட்டவணையில் 2 ம், 3 ம், பத்திகளில் குறிக்கப்பட்டிருக்கும் விலைகளை 1 நிகர இறுத்தல் அரிசிக்கு ஆகக்கூடிய சில்லறை விலையாக உடனடியாக அதே அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ் விலைகளுக்குக்கூடுதலாக ஒருவரும் விற்பனை செய்யக்கூடாது.

(iv) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) எத்தொகையான அரிசியைத் திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது 1 நிகர அந்தருக்குக் கூடிய அரிசியை ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும்.

(ஆ) எவ்வித விற்பனையும் பாவிப்புக்கு அல்லது உபயோகத்திற்கு விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும்.

(v) அரிசியோடு வேறு எந்தப் பொருளும் கலந்து ஒருவரும் விற்றலாகாது.

(vi) எவ்வகையான அரிசி விற்கப்படுமிடத்து, அவ்வாறு விற்கப்படும் அரிசி சுற்றிக்கொடுக்கும் பொருள் அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(vii) இக்கட்டளையால் "ஆகக்கூடிய" விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் தம்வசத்தில் அல்லது தமதுகட்டுப்பாட்டில் அரிசி வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(viii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இறுத்தல் " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவையின் பிரமாண இறுத்தல் நிறையாகும்.

(ix) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் மொத்தமாகவும் சில்லறையாக்வும் அரிசி விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட அரிசியின் அளவு ;

(இ) விற்கப்பட்ட அரிசியின் தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

1959 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ந் திகதி பிற்பகல் 4 மணிக்கு புத்தளம் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

யோ. வி. ஞானப்பிரகாசம்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), புத்தளம்.

## முதலாம் அட்டவணை

| பத்தி 1<br>எல்லை | பத்தி 2<br>அரிசி ஒரு நிகர அந்தருக்கு (குறைக்கப்பட்ட விலைக்கு விற்க வேண்டிய) ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | | பத்தி 3<br>அரிசி ஒரு நிகர அந்தருக்கு (உயர்த்தப்பட்ட விலைக்கு விற்க வேண்டிய) ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| லுனுவிலை .. .. .. | 13 54½ | .. | 24 74½ |
| நாத்தாண்டி, மாதம்பை, சிலாபம், ஆராச்சிகட்டுவ .. | 13 72½ | .. | 24 92½ |
| மகாவெவ, பத்துளுவ .. .. .. | 13 79½ | .. | 24 99½ |
| பிற்றிகல் கோருளை வடக்கு, தெற்கு காரியாதிகாரியின் மற்ற எல்லாப் பகுதியில் .. .. .. | 13 61½ | .. | 24 81½ |
| புத்தளம் .. .. .. | 13 88½ | .. | 25 08½ |
| வத்தாலை .. .. .. | 14 .14½ | .. | 25 34½ |
| மதுரங்குளி .. .. .. | 13 96½ | .. | 25 16½ |
| கற்பிட்டி .. .. .. | 14 16½ | .. | 25 36½ |
| ஆனமடு .. .. .. | 14 17½ | .. | 25 37½ |

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>எல்லை | பத்தி 2<br>அரிசி ஒரு நிகர இருத்தலுக்கு (குறைக்கப்பட்ட விலைக்கு விற்க வேண்டிய) ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. | | பத்தி 3<br>அரிசி ஒரு நிகர இருத்தலுக்கு (உயர்த்தப்பட்ட விலைக்கு விற்க வேண்டிய) ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| பிற்றிகல் கோறளை வடக்கு காரியாதிகாரியின் பகுதியிலுள்ள புளியங்கடவற, புளியங்காற, கொக்காவில, எலவறல, புஞ்சிவிலத்தாவ .. .. .. | 0 13½ | .. | 0 23½ |
| பிற்றிகல் கோறளை வடக்கு, தெற்கு காரியாதிகாரியின் பகுதியிலுள்ள மற்றெல்லாப் பகுதியில் .. .. | 0 13¼ | .. | 0 23¼ |
| புத்தளம் .. .. .. | 0 13¼ | .. | 0 23¼ |
| டச்பே, இலவன்குளம், நவகத்தகம .. .. | 0 13¾ | .. | 0 23¾ |
| புத்தளம், ஆனமடு, கற்பிட்டி காரியாதிகாரியின் மற்றெல்லாப் பகுதியில் .. .. .. | 0 13½ | .. | 0 23½ |

**குறிப்பு.**—இவ்விலைகள் அரிசி விற்பனை செய்யவேண்டுமென குறிக்கப்பட்ட விலைகளல்ல; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்குக் கூடுதலாக விற்பனை செய்யலாகாது.

ஒரு நிகர அந்தருக்கு ஆகக்கூடிய அல்லது குறைந்த தொகையை மொத்த விலைக்கு விற்கும்பொழுது அதன் **ஆகக்கூடிய** விலையை மேலே குறித்த ஆகக்கூடிய மொத்த விலையின் பிரகாரம் அவற்றிற்குத்தக பிரித்துக் கணக்கிடப்பட வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.